ஓம் சரவணஜோதியே நமோ நம

## ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

04.12.2025

1. சரவண சோதியில் கலந்து
சற்குருவாய் அரங்கன் யான்
சரவணப் பெருமான் அருளிட
சகலருக்கும் நன்மை தரும் வண்ணம்

2. வண்ணமதாய் அருட்சுவடி வழி
வழங்குகின்றேன் அருளாசி தன்னை
எண்ணமதில் என் நாமசெபம் கூறி
எவர் என்னை அழைக்கின்றாரோ

3. அழைப்பவர்க்கு அங்கே அருளியே
அருள் செய்கின்றேன் கலியினில்
பிழையற பூசை அன்னதானமும்
பூவுலகில் செய்யும் அன்பர்கட்கு

4. அன்பர்கட்கு அருள் செய்கின்றேன்
ஆற்றல்பட விசுவாவசு தேள் திங்கள்
நன்மை தரும் சூல குருவார அருளாசி
நாட்டிடுவேன் மக்களெல்லாம் வளம்பெற

5. வளம்பெற அரங்கன் என் பீடம்
வந்து வணங்கி நின்று
வளங்கள் தா என வேண்டி
வல்லமை மிக்க அன்னதான

6. அன்னதான சேவை வழியில்
அளவிலாப் பொருளுதவி செய்து
அண்ணலே அருள்செய் என வேண்ட
அனைத்து பாதுகாப்புமாக இறங்கி

7. இறங்கி அரங்கனும் நன்மை
எல்லா வழிதனிலும் புரிவேன்
வரங்கள் வேண்டும்படி எல்லாம்
வழங்கி பேரருள் புரிவேன்

8. அருள்தரும் பிரணவக் குடிலில்
ஆறுமுகப் பெருமான் முதல்
வரமீந்து எல்லா ஞானிகளும்
வல்லமைபட இன்று அருளவிருக்க

9. இருக்கவே கலியுக மக்கள்
இன்று பிரணவக் குடிலுக்கு வர
வருத்தமுள கரும வினைகளுடன்
வஞ்சம் சூழ்ச்சி சத்ரு கட்டமும்

10. கட்டமான பிணி சோடைகளும்
கடன்களும் மனஉளைச்சலும் விலகி
நட்டமில்லா பெருவாழ்வு பெறுவர்
நல்சீடன் ராம்குமார் கரம்பட

11. கரம்பட ஞானிகளெல்லாம் தீட்சைதர
கண்டு அணுகி தீட்சை ஏற்க
வரம்பல கூடி வாழ்வில் சிறப்பர்
வறுமை விலகி வளமே அடைவர்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி